# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 26 வியாழக்கிழமை (08-04-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 132


# திருமலை-பருத்தித்துறை பயணிகள் கப்பல் சேவை

## புனர்வாழ்வு அமைச்சு முயற்சி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

தீவுப்பகுதிக்கும் - திருமலைக்கும் இடையில் தற்சமயம் சேவையில் ஈடுபட்டுவரும் "நகர" கப்பலை வாரத்தில் ஒரு தடவை திருமலைக்கும் — பருத்தித்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடுத்த புனர்வாழ்வு அமைச்சு முயற்சி மேற்கொண்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

"நகர" கப்பல் தீவுப்பகுதிக்கும் திருமலைக்கும் இடையில் வாரத்தில் ஒரு தடவை பயணிகள் சேவையை நடத்தி வருவது தெரிந்ததே.

இந்தக் கப்பல் சேவையை வாரத்தில் ஒரு தடவை திருமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் நடத்துவதற்கு புனர்வாழ்வு அமைச்சு முயற்சி மேற்கொண்டுள்ளதாகவும் —

யாழ்ப்பாணத்தில் இருந்து அரச வேலையாகச் செல்லும் அரச அதிகாரிகளிடம், இச் சேவையை நடத்துவது தொடர்பான வாய்ப்புகள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# காவல்துறையின் 3 ஆவது அணி பயிற்சிமுடிந்துவெளியேறியது

## நேற்றுக் காலை உத்தியோகபூர்வ நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 8

தமிழீழ காவல் துறையின் மூன்றாவது அணியினர் தமது பயிற்சியை உத்தியோகபூர்வமாக நிறைவு செய்து கொண்டு வெளியேறும் நிகழ்ச்சி நேற்றுக் காலை நடைபெற்றது.

பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறும் இந்த மூன்றாவது அணி யாழ். மாவட்டத்திலும், மற்றும் முல்லை, வவுனியா, மாவட்டங்களிலும் சேவையில் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மூன்றாவது அணியினர் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும் நிகழ்ச்சி தொடர்பான மரியாதை அணி வகுப்பு நேற்றுக் காலை 7-15 மணிக்கு நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவத் துணைத் தளபதி திரு. பால்ராஜ் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம் தலைவரின் தனிச் செயலர் திரு. கண்ணா, தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன், காவல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. இளங்கோ, திரு வே. பாலகுமார், யாழ். மாவட்ட தளபதி திரு. அன்பு —

யாழ். மாவட்ட அரசியல்

(8 ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழக் காவல்துறையின் மூன்றாவது அணியினர் பயிற்சியை முடித்து வெளியேறும் உத்தியோகபூர்வ வைபவம் நேற்று நடைபெற்றபோது, பயிற்சி முடித்து வெளியேறும் பெண் காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் துணைத் தளபதி திரு. பால்ராஜ் பார்வையிட்டபோது எடுக்கப்பட்ட படம். அவருக்கு அருகில் தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் காணப்படுகிறார். (உ)

## வின்சென்ட் பெரேரா காலமானார்

கொழும்பு, ஏப். 8

சுற்றாடல் மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சரும் அரசாங்கத்தின் பிரதம கொறடாவுமான வின்சென்ட் பெரேரா (வயது 74) நேற்று அதிகாலை கொழும்பு பெரியாஸ்பத்திரியில் காலமானார். (க)

### யாழ்., மட்டு. பல்கலை மாணவருக்கு

# மகாப்பொல கொடுப்பனவு: மேலதிகமாக ஆயிரம் ரூபா

## அமைச்சர் ஹமீத் வழங்கிய உறுதி

யாழ்ப்பாணம், ஏப் 8

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மகாபொல உதவிக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக ஆயிரம் ரூபா வழங்குவதற்கு உயர் கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் வாக்குறுதி தெரிவித்துள்ளார்.

உயர் கல்வி அமைச்சரை கொழும்பில் சந்தித்த யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர் சங்க தூதுக்குழுவினர்—

இராணுவ நடவடிக்கை, பொருளாதாரத் தடை போன்ற காரணங்களால் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களில் கல்வி பெறும் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும்—

அவர்களுக்கு தற்சமயம் வழங்கப்படும் ஆயிரம் ரூபா கொடுப்பனவை இரு மடங்காக்க வேண்டும் என்றும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# லலித் கட்சி வேட்பாளர் நேற்றுக் கடத்தப்பட்டார்!

## ஊன்று கோலுடன் நடப்பவராம்

கொழும்பு, ஏப். 8

மேல் மாகாணசபைக்கான தேர்தலில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளரான சுனில் குலதுங்க, தமது வீட்டுக்கு வெளியே வீதியில் நின்று கொண்டிருந்த சமயம், இனந் தெரியாத நபர்களால் கார் ஒன்றுக்குள் பலவந்தமாக ஏற்றப்பட்டு கடத்திச் செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவரை காரில் ஏற்றியவர்கள் காரைச் சத்தமிடாமல் மெல்ல ஓட்டிச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

இந்த ஆட்கடத்தல் சம்பவம் ஒரு சில நிமிடங்களுக்குள் நடந்து முடிந்தது என்றும்—

நேற்று நடந்த அச்சம்பவத்தை ஒரு சிறுவன் மட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மற்றொரு வேட்பாளரின் வீடு சூறையாடப்பட்டது!

கொழும்பு, ஏப். 8

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு எதிரான மற்றொரு வன்செயலில்—

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர் ஒருவரின் இல்லமும் அவரது உறவினர் ஒருவரின் வீடும் — 20 பேர் கொண்ட — இனந்தெரியாத கும்பல் ஒன்றினால் சூறையாடப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அச்சம்பவத்தின்போது சம்பந்தப்பட்ட வேட்பாளர் வீட்டில் இருக்கவில்லை.

இத்தகைய சம்பவங்கள் அரசியல் உள்நோக்கம் கொண்டவையாக உள்ளன என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் தெரிவித்துள்ளனர். (உ-எ)

### தொண்டர் நிறுவனங்கள் மூலம்

# யாழ். ஆஸ்பத்திரிக்கு மருந்து வழங்குவதற்கு நிதி

யாழ்ப்பாணம், ஏப் 8

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான அத்தியாவசிய மருந்துகளை வாங்குவதற்கு நிதி உதவி வழங்க பல தொண்டர் நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

கொழும்பில் உள்ள அரசாங்க மருந்துக் களஞ்சியத்தில் மருந்து வகைகள் முடிந்து விட்டதால் பணத்துக்கு வெளிச்சந்தையில் அவற்றை வாங்குமாறு சுகாதார அமைச்சு அறிவித்திருந்தது தெரிந்ததே.

அதனைத் தொடர்ந்து யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகம் யாழ்ப்பாணத்தில் இயங்கும்

(8 ஆம பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்

எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

ஆடவருக்கான சேட்டிங், சூட்டிங்,
இளநங்கையருக்கான சாறிவகைகள்
அதற்கேற்ற பிளவுஸ் வகைகள்,
ஸ்கேட் அன் பிளவுஸ்கள்,
சிறுவர்களுக்கான
உள்நாட்டு, வெளிநாட்டு ஆடைகள்

மற்றும் உங்கள் அனைத்து தேவைகளுக்கும் நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்;

# எழினி புடைவை வாணிபம்

மின்சார நிலைய வீதி,
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

குறைந்த விலையில் நிறைந்த தரம்.

(25139)

---

## பிரத்தியேக
## புதிய சயன்ஸ் சென்ரர்

எழிலகம் முன் லேன் - யாழ்ப்பாணம்

★ 95 A/L ★

ஆரம்பம் — 10-04-93 காலை 8 மணி

தூய - பிரயோக கணிதம் —
திரு. குணசிங்கம் B. Sc. (Hons.)
இரசாயனவியல் —
திரு. செல்வா B. Sc. (Hons )
பௌதீகவியல் —
திரு. ரவீந்திரநாதன் B. Sc. (Cey.) Dip-in-Ed
விலங்கியல் —
திரு. ஈஸ்வரதாசன் B. Sc. (Cey.)Dip-in-Ed
தாவரவியல் —
திரு. பாலசுப்பிரமணியம் (சி/4897)

---

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

பிரிவு - I
O/L DAY CLASS - 1993

விஞ்ஞானம் — இரா. செல்வவடிவேல்
கணிதம் — மகேந்திரன்
தமிழ் / சமயம் — பண்டிதர்
ஆங்கிலம் — தர்மலிங்கம்
சமூகக்கல்வி — வேலா
வர்த்தகம் — நவம்

வாரத்தில் 4 நாட்கள் வகுப்புக்கள் நடைபெறும்.
ஆரம்பம்: 10 — 04 — 1993 (சனி)

(சி-4900)

---

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

A/L - 95

கலை, வர்த்தக வகுப்புகள்

ஆரம்பம்: 10 — 04 — 1993 (சனி)

பொருளியல் — திரு. உதயன்
கணக்கியல் — ஸ்ரீ
வர்த்தகம் — தேவா
அளவையியல் — S.S. மனோகரன்
புவியியல் — வேலா
தமிழ் — குழந்தை
இந்துநாகரிகம் / இந்துசமயம் — சோதி
அரசியல் — நவம்
வரலாறு — பிள்ளை

(சி-48[illegible])

---

## விஞ்ஞானக் கல்வி நிலையம்

நல்லூர்.

O/L DAY CLASS

விஞ்ஞானம் — கொலின்ஸ்
கணிதம் — சதீஸ்
தமிழ் — தங்கராஜா
சமூகக்கல்வி — கோபி
ஆங்கிலம் — நிமலன்
வர்த்தகம் — ஜீவா

ஆரம்பம்:
சனி (10 – 04 – 1993)
காலை 8 மணி

(சி-4902)

---

## விஞ்ஞானக் கல்வி நிலையம்

நல்லூர்.

A/L 95

கலை வர்த்தகம்

பொருளியல்:
இராஜேஸ்வரன்
கணக்கியல்:
கலைச்செல்வன்
வர்த்தகம்;
குகன்
அளவையியல்:
சத்தியசீலன்
தமிழ்:
தங்கராஜா
இந்துநாகரீகம்:
ஸ்ரீ

ஆரம்பம்: சனி
(10 — 04 — 1993)
பி. ப. 4 - 00 மணி

(சி-4903)

---

95 A/L

PURE - APP.

Mr. குணசிங்கம்
B. Sc. (Hons)

ஆரம்பம்:
10 - 04 - 93
காலை 8மணி

பிரத்தியேக
புதிய சயன்ஸ்
சென்ரர்

எழிலகம் முன்,
யாழ்ப்பாணம்.

(சி/4810)

---

## OSSLO INSTITUTE

32 கச்சேரி நல்லூர்-வீதி,
யாழ்ப்பாணம்.

A/L 95, 94

புதிய பிரிவு

கலை, வர்த்தக
வகுப்புக்கள்
ஆரம்பம்:
10 — 04 — 1993
காலை 10 மணிக்கு

பொருளியல் —
திரு. S. குணபாலன்
கணக்கியல் —
திரு. சத்தியவான் ரமேஷ்
அளவையியல் —
திரு. A. பிரபாகரன்
வர்த்தகம் —
திரு. S. K. சோதிலிங்கம்

(25147)

---

## MATHS CENTRE

NELLIADY.

A/L - 95

● விசேட வகுப்புகள்:

தூய/பிரயோக கணிதம் — திரு அருளானந்தம்
இரசாயனவியல் — திரு. வசிகரன்

ஆரம்பம்: 10 - 04 - 1993
11-00 a.m.

## MATHS CENTRE

NELLIADY.

● விசேட வகுப்புகள்:

✶ ஆண்டு - 5 புலமைப் பரிசில் வகுப்பு
A/L - 94 இரசாயனவியல்
திரு. வசிகரன்

ஆரம்பம்: 10 - 04 - 1993

[6103]

---

## BOND INSTITUTES

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 95

மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்

ஆரம்பம்: 10-04-1993

எமது ஆசிரியர் குழு:

CHEMISTRY
திரு. மகாதேவா
திரு. சிவசோதி
திரு. குமரன்
PHYSICS
திரு. ரூபநாதன்
BOTANY
திரு. சதீஷ்
ZOOLOGY
திரு. அல்போன்ஸ்
PURE & APPLIED
திரு. முருகையா

ECONOMICS
திரு. கணேசன்
COMMERCE
திரு. வரதன்
ACCOUNTS
திரு. தேவதாஸ்
LOGIC
திரு. ஜெயராஜ்
HINDU - CIVIL.
திரு. கமலநாதன்
TAMIL
திரு திருஞானம்
GEOGRAPHY
திரு. வில்சன்

(சி-4804)

---

## 31ஆம் நாள் நினைவலைகள்

### கனகரத்தினம் பரந்தாமன்

பரந்தாமன் - பிரமனின் மானிடன்!
பேணித்தன் பிள்ளைகள் பெட்புற வளர்த்தவன்!
கபிலன் அபிலன் சாதுளன் நிசாந்தன்
தேசறும் பிள்ளைகள் சீர்பெறக் காத்தவன்
மனைவி சகுந்தலாதேவி மங்கலமானவன்!
புனையறக் கீர்த்தியின் பொன்கல ஆனவன்!
கோப்பாய் தந்தவன் வழிபடும் சிந்தையன்!
சிவபூதராயரின் மலர்சொரி பூசையில்!
பயிலொலி மணியிலே பரவசம் ஆனவன்!
கோப்பாய் ஆலயம் பூத்தொழிர் கண்ணனின்
பண்ணுசீர்ப் பக்தன்! ஆம் பண்ணுவோன் பூசனை
யார்க்குமே ஓரிடர் அறிந்தவன் செய்திடான்
ஊர்க்குளோர் உத்தமன்! உலகினிற் இனியவன்
இனியவன் ஆம்! இங்கு இனியவன் இல்லையே
கனிதரும் ஒரு மரம் கனவிடைப் போனதே
பொத்தியே வளர்த்த இப்பூநிகர் பிள்ளைகள்
மொத்தவும் இடர்பட விதிபுரி சதியிதோ
வெறுமையை தனிமையை வேதனை உணர்வினை
மறந்தவர் வாழ்விலே மறுமலர் வெய்திட
இறைவனே அருளுக! இறைவனே அருளுக!!

சிவபூதராயனார்
பஜனை அடியார்கள்.

உரும்பராய், கோப்பாய்.
கரந்தன், நீர்வேலி.

(25143)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... மாநகர ... மன்றம் யாழ்ப்பாணம்

## இன்று

உதயன் நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தப்பட்ட யாழ். பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடம்பெற்ற யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவர்களைப் பாராட்டி இக் கல்லூரியின் பழைய மாணவர் மன்றம் நடத்தும் பாராட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (க-162)

o o o

யாழ்.மத்திய கல்லூரி உயர்தர மாணவ மன்ற ஒன்றுகூடலும் மதிய போசன விருந்துபசாரமும் இன்று வியாழன் காலை 9.30 மணிக்கு கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறும். (ஓ)

## நாளை

குரும்பசிட்டி சன்மார்க்க சபை நடத்தும் மாதாந்தக் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் நடைபெறும். இக் கருத்தரங்கில் ''அழகியற் கொள்கை'' எனும் பொருளில் யாழ். பல்கலைக்கழக மெய்யியற் துறைத் தலைவர் கலாநிதி சோ. கிருஷ்ணராசா கருத்துரை வழங்குவார். (க)

o o o

மருதனார்மடம் கல்விக் கோட்டத் தமிழ்மொழித் தின இறுதிப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமையும் மறுதினம் சனிக்கிழமையும் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். [க 90]

o o o

சுழிபுரம்-மேற்கு ஐக்கிய நாணய சங்கத்தினர், தமது தையல் பயிற்சி நிலையத்தில் நாளை வெள்ளியும், மறுநாள் சனியும் தையல் கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளனர்.

நாளை காலை 9 மணிக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. லிங்கநாதன் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார். (ஓ-28)

### நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து

# பல்கலை. அனுமதியில் சிக்கல்; தீர்க்க ஆணைக்குழு முயற்சி

## மாணவர்களுக்குத் தனித்தனியாகக் கடிதம்

யாழ்ப்பாணம், ஏப். 8

1990 ஆகஸ்ட் மாதத்தில் நடந்த ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சையிலும் —

1991 ஏப்ரல் மாதத்தில் வடக்கு, கிழக்கில் நடந்த விசேட ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையிலும் தோற்றி 1990 - 1991 கல்வியாண்டுக்கு பல்கலைக் கழகங்களுக்கு பொறியியல் I இற்குத் தெரிவான மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் தனிப்பட்ட கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

மேற்படி மாணவர்களுக்கு பொறியியல் IIஇல் கல்வி கற்க விருப்பம் உண்டா என்று கேட்டே அவர் மாணவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக யாழ். மாணவன் ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுமீது உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பால் எழுந்துள்ள சிக்கலை அடுத்தே இக்கடிதத்தை எழுத வேண்டிய நிர்ப்பந்தம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டிருப்பதாக அவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளதாகவும் கூறப்பட்டது.

நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து—

பொறியியல் பீடம் I இற்கு வடக்கு — கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மேலும் பல மாணவர்களைச் சேர்க்க வேண்டிய நிலை மானிய ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இந்த சிக்கலைச் சமாளிப்பதற்காக, பொறியியல் I இற்குத் தெரிவுசெய்யப்பட்டு தற்போது அந்த நெறியைப் பயின்று வரும் மாணவர்களில் ஒரு பகுதியினருக்கும், நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் இனிமேல் பொறியியல் I இற்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களில் ஒரு பகுதியினருக்கும் பொறியியல் II இல் இடமளிக்க ஆணைக்குழு விரும்புவதாகத் தெரிகிறது.

இதற்காகவே அந்த மாணவர்களின் சம்மதத்தைக் கேட்டு ஆணைக்குழுத் தலைவர் அவர்களுக்குத் தனித்தனிக் கடிதங்களை அனுப்பி வைத்திருக்கிறார். (உ-3)

## மரினாலில் மா வரும்

கொழும்பு, ஏப். 8

தற்சமயம் கொழும்பில் தரித்துள்ள 'மரினால்' கப்பல் திருகோணமலையில் பிரிமா ஆலையில் மா ஏற்றிக்கொண்டு வடக்கே செல்லவிருப்பதாக புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தக் கப்பலில் ஏற்றிவரும் மா மூடைகளை காங்கேசன் துறையில் உள்ள உணவுக் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் —

ஆனால் இந்தக் கப்பலை பருத்தித்துறைக்கு அனுப்பி அங்கு மா மூடைகளை இறக்க ஏற்பாடு செய்யுமாறு கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரச அதிபர் அங்குள்ள மேலதிகாரிகளைக் கேட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ 3)

## ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், ஏப். 8

அடுத்த வாரமளவில் பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கும் 'வாதுவ' கப்பலில் ஏப்ரல் மாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் எடுத்து வரப்படும் என நேற்று செயலகத்துக்கு தகவல் கிடைத்தது.

கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் இக்கப்பலில் பொருள்களை ஏற்றும் வேலைகள் தற்போது துரிதமாக நடந்துவருவதாகவும் —

இக்கப்பலில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் இடம்பெயர்ந்தோர் உலர் உணவு நிவாரணத்துக்கான உணவு முத்திரை, மாணவர் மதிய உணவு முத்திரை ஆகியனவும் எடுத்து வரப்படும் என்றும் தெரியவந்தது. (உ-3)

## எய்ட்ஸ் பற்றி எழுதியவருக்கு எய்ட்ஸ் நோய்!

லண்டன், ஏப். 8

எய்ட்ஸ் நோய் ஏற்படுவதற்கான காரணங்கள், அதன் விளைவுகள் ஆகியன பற்றி ஆராய்ந்து எழுதியவரும், எய்ட்ஸ் நோயின் கொடுமையை விளக்கும் நாடகத்தில் நடித்தவருமான ராண்டி ஷீல்ட்ஸ் என்னும் 41 வயதான அமெரிக்கருக்கு எய்ட்ஸ் நோய் தொற்றியுள்ளது.

அவர் ''எய்ட்ஸ்'' எனும் புத்தகத்தை 1985ஆம் ஆண்டு எழுதி முடித்தார். முடித்த தினத்தன்று மருத்துவ பரிசோதனை செய்தபோது அவரையும் எயிட்ஸ் தாக்கியுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

இதை அவர் வெளியே சொல்லாமல் மறைத்து வைத்திருந்தார். ஆனால் இப்போது நோயின் கடுமை அதிகமாகவே அது வெளியே தெரிந்துவிட்டது. (க)

### தமிழக சட்டசபையின்

## காங்கிரஸ் உறுப்பினர்கள் நேற்று உண்ணாவிரதம்

தமிழ்நாடு சட்டசபையின் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் நேற்று சென்னையில் — கோட்டைக்கு முன்னால் — உண்ணாவிரதம் இருந்தனர்.

காங்கிரஸ் எம். எல். ஏக்களான ஞானசேகரன், ரங்கநாதன் மற்றும் ஜனநாதன் (குமாரதாஸ் பிரிவு) எம். எல். ஏயான டாக்டர் குமாரதாஸ் ஆகிய மூவரையும் சட்டசபையின் தற்போதைய கூட்டத் தொடரின் எஞ்சிய காலத்துக்கு சட்டசபையிலிருந்து இடைநிறுத்தி சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா உத்தரவிட்டிருப்பது தெரிந்ததே.

இந்த உத்தரவை விலக்குமாறு சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் சபாநாயகரைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

அந்தக் கோரிக்கை ஏற்கப்படாததை ஆட்சேபித்தே நேற்று உண்ணாவிரதம் நடைபெற்றது. (உ-எ-க)

## மாகாணசபைத் தேர்தல்; வேட்புமனுக்கள் தாக்கல்

கொழும்பு, ஏப். 8

ஏழு மாகாணங்களிலும் உள்ள 17 மாவட்டங்களிலும் போட்டியிடுவதற்கான வேட்பாளர் பட்டியல்களை ஐக்கிய தேசியக் கட்சியும் —

11 மாவட்டங்களில் போட்டியிடுவதற்கான தனது வேட்பாளர் பட்டியல்களை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் நேற்று சமர்ப்பித்தன.

நவசமசமாஜக் கட்சி ஐந்து மாவட்டங்களில் போட்டியிடுவதற்கான தனது வேட்பாளர் பட்டியலைத் தாக்கல் செய்தது.

மாத்தளை, குருணாகல, பதுளை, கம்பஹா, புத்தளம், கேகாலை ஆகிய மாவட்டங்களில் போட்டியிடுவதற்கான தனது வேட்பாளர் பட்டியல்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்று சமர்ப்பித்தது.

மொனறாகலை மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் பட்டியலை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிதலைமையிலான பொது மக்கள் கூட்டணி நேற்றுதாக்கல் செய்தது.

தேசிய தொழிலாளர் சங்கம் நுவரெலியா மாவட்டத்திலும் —

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் நுவரெலியா மற்றும் கொழும்பு மாவட்டங்களிலும் போட்டியிடுவதற்கான தமது வேட்பாளர் பட்டியல்களை நேற்று சமர்ப்பித்தன.

காலி மாவட்டத்தில் ஒரு சுயேச்சைக் குழுவும் —

கொழும்பு, நுவரெலியா மாவட்டங்களில் இரு சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுவதற்காக வேட்பாளர் பட்டியல்களைச் சமர்ப்பித்திருக்கின்றன.

இத்தேர்தலுக்கு வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதற்கான கடைசித் தினம் இன்றாகும். (உ-எ-6)

## சமூகத்தின் வளத்திற்கு சமயம் பயன்பட வேண்டும்

### டானியல் நினைவுக் கூட்டத்தில் உரை

''சமயங்கள் சமூகத்தின் வளத்திற்குப் பயன்படவேண்டும். இன்றேல் அவை வாழ்வதற்கு அருகதை அற்றவை. சமயத்துக்கும் ஒரு சமூக நோக்கு வேண்டும்''

யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறைத் தலைவர் வண. ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் அடிகள் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 23ஆம்திகதி மாலை யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடத்திய எழுத்தாளர் டானியல் நினைவுக் கூட்டத்தில் ''டானியலின் கானல்'' நாவல்-ஒரு சமய சமூகக் கண்ணோட்டம் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

செல்வி சு. மாதவி கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். தொடக்கவுரையை பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும், அறிமுகவுரையை பேராசிரியர் அ.சண்முகதஸ்ஸும் நிகழ்த்தினார்கள்.

சந்திரகாந்தன் அடிகள் மேலும் பேசுகையில், ''டானியல் ஒரு ஆழ்ந்த சமூகக் கண்ணோட்டம் உடைய நாவலாசிரியர். அவருடைய எழுத்தில் மிகவும் துல்லியமான யதார்த்தப் பண்பு மிளிர்கிறது'' என்று கூறினார்.

செல்வி சு. மாதவி தமது தலைமை உரையில் ''டானியல் துணிகரமான சமுதாயப் பார்வை உடையவர்; அவர் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரலாக விளங்கினார்'' எனவும் ''அவர் ஒரு மனிதாபிமானம் மிக்க படைப்பாளி'' எனவும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண் கச்சுயின் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ''கானல் நாவலில் பெண்மை'' என்ற தலைப்பில் நினைவுரை நிகழ்த்தினார்.

தமிழ் மன்றச் செயலாளர் திரு. எம். ஆர். பி. டயஸ் நன்றி கூறினார். (க-51)

## மட்டக்களப்பில் தமிழர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 8

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாகமுனை என்ற கிராமத்தில் கடந்த சனியன்று தேடுதல் நடத்திய படையினர் அங்குள்ள தமிழர்கள் பலரைக் கைது செய்துள்ளனர்.

அம்பிலாந்துறை முகாமில் இருந்து வந்த படையினரே இந் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்றும்—

கைது செய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்ட பலர் அங்கு சித்திரவதைக்குட்பட்டதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

## கோழிகளுக்கு தடுப்பூசி

கொழும்பு, ஏப். 7

வடமராட்சி கிழக்கில் தற்போது நிலவுகின்ற அதிக வெப்பம் காரணமாக கோழிகளுக்கு ஏற்படும் நோய்களைத் தடுக்கும் பொருட்டு தடுப்பூசி போடும் வேலைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்குப் பகுதி எங்கும் பல ஆயிரக்கணக்கான கோழிகளுக்கு ''ரனிக்கற்'' [illegible] தடுப்பூசி [illegible] தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## முன்னோடி பரீட்சை குறித்து ஆய்வு நடக்கும்

### கருத்துத் திரட்ட முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 8

கடந்த வருட இறுதியில் நடத்தப்பட்ட க.பொ.த ப. முன்னோடிப் பரீட்சை குறித்து தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை ஆய்வு ஒன்றை நடத்த உள்ளது.

அதன் பொருட்டு ஆய்வுக் குழு ஒவ்வொரு கல்விக் கோட்டத்துக்கும் சென்று, நேரில் தகவல்கள், தரவுகளைச் சேகரிக்கும்.

ஆய்வுக்குழு கோட்டரீதியாகப் பின்வரும் இடங்களுக்கு குறிப்பிட்ட திகதிகளில் சென்று கருத்துக்களை அறியும்.

யாழ்ப்பாணம், வேலணைக் கோட்டங்கள் — தமிழீழக் கல்விக் கழக அலுவலகம் (17-04-93)

மருதனார்மடம், பண்டத்தரிப்புக் கோட்டங்கள் — இராமநாதன் கல்லூரி (18-04-93)

வடமராட்சிக் கோட்டம் — வேலாயுதம் ம. வி (20-04-93)

தென்மராட்சிக்கோட்டம்— டிறிபேர்க்கல்லூரி (22-04-93)

மேற்கூறப்பட்ட இடங்களுக்கு ஆய்வுக்குழு குறிப்பிட்ட தினங்களில் காலை 9-30 மணிக்கு விஜயம் செய்யும்.

இதே வேளை முன்னோடிப் பரீட்சை முடிவுகள் குறித்து கருத்துத் தெரிவிக்க விரும்பும் ஆர்வலர்கள்—

பரீட்சைக் காலம், பாடத்திட்டம், வினா உருப்படிகள், விடைத்தாள் மதிப்பீடு என்பன சம்பந்தமான தமது அபிப்பிராயங்களை எழுத்து மூலமாக—

கல்வி மேம்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. க. அருண் ஆசிரியர், 19, நாயன்மார் கட்டு வீதி. நல்லூர் என்ற விலாசத்துக்கு இம் மாதம் 23 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது; [அ]


அளவெட்டி வடக்கு

மகளிர் சிக்கன கடன் வழங்கும் சங்கத்தின்

**பொதுக் கூட்டம்**

மேற்படி சங்கத்தின் கூட்டமானது 11-04-93 சனிக்கிழமை காலை 10-30 மணிக்கு மருதனார் மடத்திலுள்ள அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறும். இடம் பெயர்ந்துள்ள சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

திருமதி ப. ஜெகநாதன்,
தலைவி.

(5874)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

2 மாத பொமனேரியன் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 362, ராதா கடை, கொழும்புத் துறை சந்தி, கொழும்புத் துறை, (25140)

### இலவச திருமண சேவை

27 வயது, பூரட்டாதி, ஜேர்மனியில் தொழில்புரிபவருக்கு மணப்பெண் தேவை. விவாகம் இலங்கையில் அல்லது அழைக்கப்படும். ஆசாரித் தொழில் ஈடுபாடுள்ளவர் விரும்பத்தக்கது. தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [25113]

37 வயது, கேட்டை, செவ்வாய் 8, சுவிஸில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் வேண்டும். இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம் தொடர்பு: ஞாயிறு காலையில். து விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (25111)

### புலமைப் பரிசில்

கட்டுரை மலர்கள்-60; 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு உகந்தது. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (சி-4727)

### மணமகள் தேவை

31 வயது, மகம், பிரான்ஸில் தொழில்புரிபவருக்கு மணப்பெண் தேவை இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல. 897, மே/பா உதயன். (6100)

33 வயது, புனர்பூசம், செவ்வாய் 4, வங்கி உத்தியோகத்தருக்கு வங்கி, அரச, கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் 30 வயதுக்குட்பட்ட அழகிய மணப்பெண் தேவை. தொடர்பு: இல. 898, மே/பா உதயன். (6102)

---

## நொதேண்
கல்வி நிலையம்
சுண்டிக்குளி.

**O/L DAY CLASS**

ஆரம்பம்:
**10 — 04 — 1993**
செவ்., வியா., சனி., ஞாயிறு 8 00 a.m.

குறிப்பு:
கடந்த பரீட்சையில் 95% மான மாணவர்கள் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(25127)

---

## பாராட்டுகின்றோம்

1991ஆம் ஆண்டு, ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரீட்சையில் யா/திருநெல்வேலி றோ. க. த. க. பாடசாலையைச் சார்ந்த பா. துஷ்யந்தி — 166 புள்ளிகளையும், தி. காயத்திரி - 161 புள்ளிகளையும், வே. ஜமுனா- 156 புள்ளிகளையும் பெற்று சாதனை புரிந்தமைக்காக அவர்களைப் பாராட்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்தி சபையினர்.

(25132)

---

## கலை, வர்த்தகக் கல்லூரி
**C. C. A.**
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**A/L - 95**
புதிய பிரிவு I

எமது ஆசிரியர்குழு:

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. உதயன் |
| கணக்கியல் | — | திரு. ஶ்ரீ |
| வர்த்தகம் | — | திரு. இரட்ணம் |
| அளவையியல் | | திரு. சயந்தன் |
| இந்துநாகரிகம் | — | திரு. ஜோதீஸ்வரன் |
| புவியியல் | — | திரு. வேலா |
| தமிழ் | — | திரு. தங்கராஜா |
| அரசியல் | — | திரு. பஞ்சு |

ஆரம்பம்! 10 - 04 - 1993 | காலை 8-00மணி

குறிப்பு: மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது. ஆகவே முன்கூட்டியே பதிவு செய்து இடத்தை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

(சி/4735) -நிர்வாகி

---

## நியூட்டன் அக்கடமி
இருபாலை றோட், கோண்டாவில்.

**O/L DAY CLASS**
(பகல் முழுநேர வகுப்பு)

**பிரிவு II ஏப்ரல் 10இல் ஆரம்பம்**

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| கணிதம் | — | திரு S. கருணாகரன் |
| விஞ்ஞானம் | — | திரு. இரா. அருட்செல்வம் |
| தமிழ் / சமயம் | — | பிரபல ஆசிரியர் |
| சமூகக்கல்வி | — | திரு. கணேஷ் |
| ஆங்கிலம் | — | திரு. சத்தியமூர்த்தி |
| வர்த்தகம் | — | ஶ்ரீ |

- ★ வாரத்தில் 4 நாள் வகுப்புக்கள்
- ★ வாரத்தில் 6 கணித வகுப்புகள்
- ★ வாராந்த மீட்டல் வினா - விடை வகுப்புகள் நடைபெறும்.
- ★ அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன

(25137)

---

## BEACON
**STUDY CENTRE**
Uduppiddy

**1995 (A/L)**

- ★ கலை
- ★ வர்த்தகம்
- ★ விஞ்ஞானம்

ஆரம்பம்:
**10 — 04 — 1993** (சனி)
முற்பகல் 8-00

(சி-4745)

---

## ECALOM கல்வி நிலையம்
மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்.

**A/L 95**

ஆரம்பம்: 10 — 04 — 1993 பி. ப. 3 மணி.

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. E. பிரபாகரன் |
| வர்த்தகம் | — | திரு. வரதன் |
| கணக்கியல் | — | திரு. சௌந்தி |
| அளவையியல் | — | திரு. A. பிரபாகரன் |

(அளவையியல் வினா - விடை பகுதி - II
செவ்வாய், வியாழன் 3-00 — 4-00 மணி.)

(சி-4898)

---

## விக்னா கல்வி நிறுவனம்
**52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.**
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)
பிரிவுIII

**O/L DAY CLASSES (8-00 - 2-00)**
ஆரம்பம்: இன்று 08 — 04 — 93 8மணி

- ★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்
- ★ வாரத்தில் 4 நாட்கள் நடைபெறும்
- ★ கணிதம், விஞ்ஞானம் வாரத்தில் 6மணித்தியாலம் நடைபெறும்
- ★ இவ்வருடம் 5 பிரிவுகள் மட்டுமே ஆரம்பமாகும்.

(சி/4880)

---

## பாரதிதாசன் கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 95 கலை, வர்த்தகம்**

நேர அட்டவணை:

| ஆசிரியர் | பாடம் | சனி/ஞாயிறு நேரம் |
|---|---|---|
| திரு. பசில் | வர்த்தகம் | 7-00 — 8-00 |
| திரு. பாலா | இந்துநாகரிகம் | 8-00 — 9-00 |
| திரு கொலின்ஸ் | கிறிஸ்தவம் | 8-00 — 9-00 |
| திரு. சௌந்தி | கணக்கியல் | 9 00 — 10-00 |
| திரு. வரதராஜன் | பொருளியல் | 10-00 — 11-00 |
| திரு. S. S. மனோகரன் | அளவையியல் | 11 00 — 12-00 |
| திருமதி மீரா | தமிழ் | 12-00 — 1-00 |
| திரு. ஜோசப் | புவியியல் | 1-00 — 2-00 |
| திரு. பஞ்சாட்சரம் | அரசியல் | 2-00 — 3-00 |

**ஆரம்பம்: 10 — 04 — 1993 (சனி)**

[சி-4742]

---

## NEW SCIENCE HALL
கன்னாதிட்டி வீதி, யாழ். நகர்.

**ஆசிரியர் குழு - 95 (A/L)**

★ பௌதிகவியல்:
திரு. S. சோதிலிங்கம் B. Sc. (Special)
திரு S. J. கணேசன் B. Sc (Eng.)

★ இரசாயனவியல்;
திரு. K. சண்முகசுந்தரம் B.Sc (Hons,) Dip-in-Ed
திரு. M. சிவசுப்பிரமணியம் B.Sc. (Hons.)

★ தாவரவியல்:
திரு. V. S. குணசீலன் B. Sc (Special)

★ விலங்கியல்:
திரு. R. தம்பிராஜா B. Sc. Dip-in-Ed.
திரு. S. சிறீகரன் B. Sc. (Hons.)

★ தூய/பிரயோக கணிதம்:
திரு. P. வெக்டர்-வேலாயுதம் B.Sc. (Hons.)
திரு. S. குணசிங்கம் B Sc., Dip-in-Ed

நேர அட்டவணை
(சனி, ஞாயிறு தினங்கள் மட்டும்)

| பாடங்கள் | பிரிவு I | பிரிவு II |
|---|---|---|
| பௌதிகவியல் | 6-00 — 7-00 | 10 00—11-00 |
| தாவரவியல் | 7-00— 8-00 | 11-00—12-00 |
| விலங்கியல் | 8 00— 9 00 | 12-00— 1 00 |
| இரசாயனவியல் | 9-00—10-00 | 1 00— 2 00 |
| தூய/பிரயோக கணிதம் | 7-00 — 9-00 | 11-00— 1-00 |

**ஆரம்ப திகதி: 10 - 04 - 1993 (சனி)**

குறிப்பு:
மேற்படி பிரிவுகளில் சேர விரும்புகின்ற அனைத்து மாணவர்களும் உங்கள் அனுமதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக 09-04-1993 (வெள்ளி)க்கு முன்னர் அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, அவற்றை உடனடியாகப் பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

— நிர்வாகி.

(சி-4739)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியை சந்தித்த பின் ஆயர் கென்னத் யாழ். வருவார்

யாழ்ப்பாணம், ஏப். 8

ஏற்கனவே யாழ்ப்பாணம் வந்து தலைவர் திரு. வே. பிரபாகரனை சந்தித்து திரும்பிய அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ விரைவில் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவை சந்திக்க உள்ளார்.

அதன் பின்னர் இரண்டாவது தடவையாக ஆயர் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

முதல் யாழ்ப்பாண விஜயத்தின் பின்னர் கொழும்பில் அரச உயர் அதிகாரிகளையும் மற்றும் கட்சித் தலைவர்களையும் ஆயர் பெர்னாண்டோ சந்தித்திருந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆயரைச் சந்திக்க விருப்பம் தெரிவித்து ஜனாதிபதி அவருக்கு கடிதம் அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

விரைவில் ஜனாதிபதி - ஆயர் சந்திப்பு நடைபெற விருப்பதாகவும் —

அதன் பின்பே யாழ்ப்பாணம் வருவதுபற்றி ஆயர் முடிவு செய்வார் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## கைது

பம்பாய், ஏப். 8

அண்மையில் இடம்பெற்ற பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக மேலும் மூன்று பேரை பொலீஸார் கைது செய்தனர். இவர்கள் அனைவரும் டுபாயில் இருந்து பம்பாய் வந்தபோது கைதாகினர். இவர்களையும் சேர்த்து பம்பாய் சம்பவம் தொடர்பாக கைதானவர்களின் எண்ணிக்கை 62ஆக அதிகரித்துள்ளது. (ஒ-எ)

## பங்காரப்பா மீது ஊழல் வழக்கு

பெங்களூர், ஏப். 8

கர்நாடக மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் பங்காரப்பா மீது இந்திய மத்திய புலனாய்வுப் பொலீஸார் ஊழல் குற்றச்சாட்டு வழக்கு ஒன்றை பதிவு செய்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

காங்கிரஸ் தலைமைப்பீடத்தின் உத்தரவுக்கு இணங்க இவர் அண்மையில் முதலமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்திருந்தார் என்பது தெரிந்ததே.

(ஒ-எ)

## தபால் விநியோக ஊழியருக்கு அலவன்ஸ்

அரியாலை, ஏப்.8

யாழ். மாவட்டத்தில் கடமைபுரியும் தபால் விநியோக ஊழியர்களுக்கு போக்குவரத்து அலவன்ஸ்ஸாக நூறு ரூபா மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்று கொழும்பு பிரதம தபால் திணைக்களத்தினால் யாழ். பிரதம தபாலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து இத்திட்டம் அமுலுக்கு வருவதாகவும் அந்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-17)

## பனை வெல்லம்; விலை நிர்ணயம்

யாழ்ப்பாணம், ஏப். 8

தமிழீழத்தின் தேசிய வளங்களுள் ஒன்றான பனை வளத்தின் உச்ச பதனீர் உற்பத்திக் காலம் இதுவாகும். இதனைப் பயன்படுத்தி பனை வெல்ல உற்பத்தி தற்போது அமோகமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒரு கிலோ பனை வெல்லத்தின் சில்லறை விற்பனை விலை 40 ரூபாவாகவும், மொத்த விற்பனை விலை 37 ரூபாவாகவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், பனை அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் விற்பனை நிலையங்களிலும், தனியார் விற்பனை நிலையங்களிலும் பனை வெல்லத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது.

(ஒ)


கடந்த வருடங்களைப் போல் — இம் முறையும் எமது நிறுவன மாணவர்கள் அள்ளிக் குவித்த பெறுபேறுகள் எமது ஆசிரியர் குழுவின் திறமைகளை மீண்டும் உறுதி செய்கின்றன.

எமது வழமையான ஆசிரியர் குழுவுடன் சனி, ஞாயிறு, செவ்வாய், வியாழன் நாட்களில்,

**O/L** பகல்நேர, மாலைநேர DAY CLASS & EVENING CLASS

ஆண்டுகள் 4, 5, 6, 7. 8, 9, 10

(ஒவ்வொரு வகுப்பு மாணவர்களுக்கும் இலவச மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்)

**புதிய பிரிவுகள்**

ஆரம்பம்: 10 - 04 - 1993

**BOND INSTITUTES**

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-4887)



**நொதேண் கல்வி நிலையம்**

சுண்டிக்குளி.

**A/L 95**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | ஞானேஸ் |
| வர்த்தகம் | — | குகன் |
| கணக்கியல் | — | ரவீந்திரன் |
| அளவையியல் | — | சிவகுமார் |
| தமிழ் | — | திருஞானம் |
| கிறீஸ்தவம் | — | அமல் |

ஆரம்பம்: 10 - 04 - 93

(25126)



**விக்னா கல்வி நிறுவனம்**

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**95** கலை, வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பம்: 10-04-93 10 மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. S. K. பிரபாகரன் |
| அளவையியல் | — | திரு. விக்கி |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்துநாகரிகம் / இந்துசமயம் | — | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு. குணராஜா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறீதரன் |

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டதால் 200 மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்

(சி/4881)



**NEW SCIENCE ACADEMY**

எழிலகம் முன்பாக. யாழ்ப்பாணம்,

**95 A/L**

WEEK-END CLASSES

ஆரம்பம்: 10 — 04 — 1993

சனிக்கிழமை காலை 9-00மணி

| | | | | |
|---|---|---|---|---|
| CHEMISTRY | — | 9-00 | — | திரு. சண் |
| BOTANY | — | 11-00 | — | திரு. குணசீலன் |
| ZOOLOGY | — | 12-00 | — | திரு. தம்பிராஜா |
| PHYSICS | — | 12-00 | — | திரு. கணேசன் |
| CHEMISTRY | — | 1-00 | — | திரு. மணியம் |
| PHYSICS | — | 2-00 | — | திரு. சோதிலிங்கம் |
| APP. / PURE MATHS | — | 4-00 | — | திரு. வெக்டர் |

குறிப்பு: அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

(சி-4895)



என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களை தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத்திரும்பினால் அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்.

(II நாளா. 7:14)

**சகலருக்கும் ஓர் நற்செய்தி!**

பாவம், பயம், நோய், புகைத்தல், பேய், பில்லிசூனியம், மதுபானம், பிரச்சினைகள், கெட்ட பழக்கங்களிலிருந்து

"இயேசு கிறிஸ்து"வின் மூலம் விடுதலை

**ஈஸ்டர் சுவிசேஷமும்**

**தெய்வீக சுகமளிக்கும் ஆராதனைகளும்**

காலம்: 1993 ஏப்ரல் 8 முதல் 11 வரை

நேரம்: தினமும் மாலை 4-00 மணிக்கு

இடம்: இலங்கை பெந்தெகொஸ்தே சபை,
111, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

ஏனைய கூட்டங்கள் : காலை 7-00 மணிக்கு — வேதபாடம்
காலை 9-00 மணிக்கு — ஆராதனை
இரவு 9-00 மணிக்கு — காத்திருப்புக் கூட்டம்

★ இலவச உட்பிரவேசம்.

★ யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ காணிக்கை சேர்க்கப்படமாட்டாது.

நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோசனப்படுத்திக்கொள்ளுங்கள். (எபே. 5:16)

ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும். (மத், 24:14)

(25129)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களகரமான திறப்பு விழா

(ஸ்தாபன இடமாற்றம்)

இதுவரை காலமும் நடேசன் ரேடிங் கம்பனி இல. 165, காங்கேசன்துறை வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம், இல. 288, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள கலைமகள் வர்த்தக நிலையத்தில் ஆங்கிரச வருடம் பங்குனித் திங்கள் 26ஆம் நாள் (08-04-93) வியாழக்கிழமை காலை 7 மணிமுதல் 10 மணிவரையில் உள்ள சுபமுகூர்த்த வேளையில் ஆரம்பித்து வைக்கப்படும் என்பதை வர்த்தக அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

க. நந்தகுமாரன் (நந்தன்),
கலைமகள் வர்த்தக நிலையம்,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை ஸ்தாபனம்:
நந்தினி களஞ்சியம்.
303 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(25138)

## WANTED TEACHERS

ST. PATRICK'S COLLEGE
JAFFNA.

A full - time teacher for

| | |
|---|---|
| Mathematics | for years 6 to 8 |
| English | for years 1 to 5 |

Applications after 19 - 04 - 1993 will not be entertained.

- RECTOR.

(இ-4807)

## BITSMANS

கல்வி நிறுவனம் மானிப்பாய்.

பிரிவு 2 93

O/L DAY CLASS

[முழு பகல் நேர வகுப்புக்கள்]

ஆண்டு 9, 10, 11 புதிய பிரிவு

எமது வழமையான "Super Grade" ஆசிரிய குழுவினால் கற்பிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — J. R. சூரி |
| கணிதம் | — இரா. அருட்செல்வம் |
| வர்த்தகம் | — N. ராஜன் |
| தமிழ் | — பாலா, தர்மா |
| ஆங்கிலம் | — M. A. ஹரி |
| சமூகக்கல்வியும் | — N ராஜன் |
| வரலாறும் | — கணேஸ் |
| இந்துசமயம் | — தர்மா |
| விவசாயம் | — சிவராஜா |

ஆரம்பம்: 10 - 04 - 1993
சனி காலை 8 மணி.

★ வாரத்தில் 4 நாட்கள் வகுப்புகள் நடைபெறும்.
★ எமது கல்வி நிறுவனத்தின் தரத்திற்கும், ஆசிரியர்களின் திறமைக்கும் கடந்த கால பரீட்சை பெறுபேறுகள் சான்றாகும்.

A/L கலை, வர்த்தக கணித, விஞ்ஞான வகுப்புக்கள்
வழமையான ஆசிரியர்களினால்
14 - 04 - 1993 சனி
6-30க்கு ஆரம்பமாகின்றன.

(சி-4808)

## ஆலயங்களில்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் 11ஆம் திருவிழாவான இன்று வியாழன் பகல் விநாயகப் பெருமான் பூந்தண்டிகையில் விசேட நாதஸ்வர தவில் இசையுடன் உள்வீதி வலம் வருவார்.

(க)

o o o

சுன்னாகம் மயிலணி ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு ஆரம்பாகி தொடர்ந்து 10 நாட்களுக்கு நடைபெறும். (க-89)

o o o

தெல்லிப்பழை காசி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று வியாழன் பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு தேர் உற்சவம் இடம்பெறும். (ஒ 89)

## பாடசாலைகளில்

நாவற்காடு கணபதிப்பிள்ளை மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

(க-ரி)

o o o

கைதடி நாவற்குழி அ. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திரு வே. இராமர் தலைமையில் நடைபெறும். [க-30]

o o o

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா இன்று வியாழன் காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். யாழ். கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஒ)

o o o

1991, 1992 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைகளில் சித்தியடைந்த யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வும், ஆசிரியர்களை கௌரவிக்கும் விழாவும் நாளை காலை 9 மணிக்கு பாடசாலையில் அதிபர் திரு கா. தவராசா தலைமையில் நடைபெறும். யாழ். கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் பிரதம விருந்தினராகவும், யாழ். இந்து அதிபர் திரு அ. பஞ்சலிங்கம், யாழ் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. தி நாகராசா ஆகியோர் விசேடவிருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

(உ)

## விவசாயக் குழு கூட்டம்

யாழ். மாவட்ட விவசாய உபகுழுக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு செயலகத்தில் நடைபெறவிருக்கிறது.

உதவி அரச அதிபர்கள், விவசாய திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொள்வர்.

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்''

## யாழ். அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின்

## 35ஆவது ஆண்டு தமிழ் இசை விழா

08-04-1993 வியாழக்கிழமை
இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

மாலை 7-00 மணி

அண்ணாமலை இ. த. ம. மாணவர்கள் — பாட்டு, வயலின், மிருதங்கம்

7-30 மணி

| | |
|---|---|
| செல்வி ஜனனி சொக்கலிங்கம் | — வீணை |
| செல்வன் சதா வேல்மாறன் | — மிருதங்கம் |

8-15 — 9-30 மணி

| | |
|---|---|
| திருமதி நேசபூபதி நாகராசா | — பாட்டு |
| திரு. S. பத்மநாதன் | — வயலின் |
| திரு T. ராஜன் | — மிருதங்கம் |
| திரு. V. தபோதநாயகம் | — கடம் |

வாழ்த்துவோர்:
றஞ்சனாஸ் புடைவை மாளிகை,
நவீன சந்தை, யாழ்ப்பாணம். [25146]

## எடிசன் அக்கடமி

[யாழ். இந்துக் கல்லூரி அருகாமையில்]
411/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

O/L DAY CLASS

புதிய பிரிவு ஆரம்பம்
10 - 04 - 93 சனி மு. ப. 9 மணி

| | |
|---|---|
| கணிதம் : | திரு. B.P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம் : | திரு. இரா. செல்வவடிவேல்<br>திரு. J.J. கொலின்ஸ் |
| சமூகக்கல்வி : | திரு K.S. முத்துலிங்கம் |
| தமிழ் : | திரு. வேல்நம்பி |
| ஆங்கிலம் : | திரு. C. சத்தியமூர்த்தி |
| வர்த்தகம் : | திரு. விக்கி |
| சமயம் : | கோ. இராஜலிங்கம் |

★ வாரத்தில் 4 நாட்கள் நடைபெறும்

(25150)

யாழ். மாவட்ட ச. ச. நிலையங்களின்

## கவனத்திற்கு

யாழ். மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்கள் சில பல்வேறு தேவைகளுக்காக நிதிகள் சேகரித்தல் சம்பந்தமாகப் பல முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதால் எதிர்வரும் காலங்களில் எந்த ஒரு சனசமூக நிலையமும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத்தின் முன் அனுமதியின்றிப் பொது மக்களிடமிருந்து நிதிசேகரிக்க வேண்டாமெனக் கேட்டுக் கொள்கின்றேன். அனுமதியுடன் நிதி சேகரிக்கும் பட்சத்தில் நிதி சேகரித்து முடிந்ததும் அவற்றின் விவரத்தினை உள்ளூராட்சி மன்றங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

சுந்தரம் டிவகலாலா,
பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர்.
யாழ்ப்பாணம்

[சி-49 1]

மாகியம்பதி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலய

## நடராஜ விக்கிரக பிரதிஷ்டா

## மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

ஷை விழா நிகழும் அங்கிரச வருஷம் பங்குனி மீ 26 ஆம் திகதி (08-04-93) வியாழக்கிழமை உத்தராயண புண்ணிய காலமும் சுவாதி நட்சத்திரமும் கூடிய சுபவேளையில் காலை 8.30 மணி முதல் இணுவில் தர்மகர்த்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ மகாதேவக் குருக்கள் அவர்கள் தலைமையில் ஆலய பிரதமகுரு சண்முகசுந்தரக் குருக்கள், ஆலங்குழாய் முருகமூர்த்தி ஆலய பிரதமகுரு இரத்தின சபாபதிக் குருக்கள், பிரதிஷ்டா பிரதமகுரு இ. கேதீஸ்வரக் குருக்கள் அவர்கள் அநுசரணையுடன் இனிது நிறைவேற அம்பாள் அருள் பாலித்துள்ளார். அம்பாள் அடியார்கள் அனைவரும் பங்குபற்றி அருள் பெறுவார்களாக.

மங்கள இசை N. K. நடராசா குழுவினர்

பொ. முருகேசம்பிள்ளை
தலைவர்

பரிபாலன சபையினர்

(5876)

## பிரத்தியேக வகுப்புகள்

A/L 95

ஆரம்பம்: 10 - 04 - 1993 காலை 9-00 மணி
76/7, TEMPLE ROAD, JAFFNA.

கணக்கியல் D. SAM

குறிப்பு:
★ வாரத்தில் 5 மணித்தியால வகுப்புகள் நடைபெறும்.
★ மாணவர் அனுமதி வரையறுக்கப்பட்டுள்ளபடியால் முன் கூட்டியே பதிவு செய்யவும்.

(25148)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**

## மறம் நாடும் மதத் தலைவர்கள்

வடக்கு-கிழக்கில் போரில் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீலங்கா ஆயுதப் படையினருக்குப் பரிசில்கள் வழங்கி ஊக்கமளிப்பதற்குப் பௌத்த பிக்கு ஒருவர் நடவடிக்கை எடுப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. சிங்கள மக்கள் முன்னணி என்ற அமைப்பைச் சேர்ந்த வணகுணதிச தேரோ என்பவர் இதற்கான ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்.

வடக்கு-கிழக்கில் களத்தில் நின்று போராடும் சிப்பாய்கள் மனம் சலித்துப் போயுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் தொடுக்கப்படும் தாக்குதல்களில் தமது உயிரை இழக்க வேண்டிய ஆபத்து நிறைந்திருக்கிறது என்று அவர்கள் உணர்கிறார்கள்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் யுத்த களத்தில் நிற்கும் சிப்பாய்களுக்கு தெம்பளிப்பதும், மனச்சலிப்பை நீக்குவதும் படைத் தலைமைத்துவங்களுக்கும், அரசாங்கத்துக்கும் பெரும் சிரமமான காரியமாகிவிட்டது. ஏற்கனவே படையை விட்டுப் பெரும் எண்ணிக்கையானோர் ஓடியது ஒருபுறமிருக்க, மிஞ்சி இருப்பவர்கள் ஓடிவிடாமல் தடுக்கும் நடவடிக்கைகளாகவே படை உயர் அதிகாரிகள், அமைச்சர்கள் அடிக்கடி வடக்கு-கிழக்கில் உள்ள இராணுவ மற்றும் படை முகாம்களுக்கு விஜயம் செய்கிறார்கள்.

இவற்றால் பயன் ஏற்படவில்லை, பெறுபேறு சாதகமாக இல்லை என்பதனால் தான் போலும், இப்போது பொதுமக்களே பரிசளித்து ஊக்குவிக்கும் திட்டம்

யுத்தத்தை நிறுத்துமாறும் அன்பு தான் இன்ப ஊற்று என்றும் அசோகச் சக்கரவத்திக்குப் போதித்த அன்றைய பௌத்த துறவிக்கு நேர் எதிரானவர்கள், முரணான கொள்கை உடையவர்கள் ஸ்ரீலங்காவின் இன்றைய பௌத்த பிக்குகள்.

பௌத்த மதத் தத்துவங்களைச் சாகடித்துவிட்டு நாட்டுப்பற்று, மத மேம்பாடு என்ற பெயரில் அவர்கள் அறத்துக்கும் அன்புக்கும் பதிலாக மறத்தையும், வன்செயல்களையும் ஊக்குவித்து வளர்த்து வருகிறார்கள்.

அதன் பெறுபேறே சிங்கள பௌத்த பேரினவாதம். மறத்தின் வழி நின்று தமிழர்கள் மீது அடக்குமுறை செலுத்தவும், அவர்களை அழிக்கவும் சூத்திரதாரிகள் பௌத்த பிக்குகளே. நாடு இன்றைய அவல நிலைக்குத் தள்ளப்பட்டதற்கு அவர்களே மூலகாரணர்கள். அவர்கள் மதத்தை மறந்து அரசியலில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியதாலேயே இத்தனை அதர்மங்களும்.

எனவே பௌத்த பிக்குகள் இராணுவத்தினருக்குப் பரிசில்கள், கௌரவங்கள் வழங்கி யுத்தத்தை நீடிக்கத் தூண்டுவது ஒன்றும் வியப்படையக் கூடியதல்ல.

யுத்தக் களங்களுக்கு மகாநாயக்க தேரர்களே விஜயம் செய்து, பதுங்குகுழிகளில் நின்று யுத்தமுனையைப் பார்த்தும், சிப்பாய்களுக்கு ஆசி கூறியும் ஊக்கமளித்து மறம் வளர்க்கும் போது வெகுமதிகள் வழங்குவது ஒன்றும் புதுமையல்லவே! அவர்களது மறம் நாடிய, அதர்மக் கொள்கையும், யுத்த வெறியும் மேலும் ஊர்ஜிதமாகின்றன; அவ்வளவுதான்!

நீதி கேட்டு நடத்தப்படும் தமிழர் தரப்பில் நடக்கும் தர்ம யுத்தம் வெல்லும் என்பதை உணரமுடியாமை அவர்களது அறியாமையே. அதர்மத்தை ஊக்குவிக்க அவர்கள் கங்கணம் கட்டி நிற்கிறார்கள். தர்மத்துக்கு துணை நிற்க தமிழ்ப் பொதுமக்களும், மதத்தலைவர்களும் முழு அளவில் முன் வருவது எப்போது?

# இராணுவ தலைமைத்துவத்திலேயே படையினரின் வெற்றி தங்கியுள்ளது

## ஜெனரல் சிறில் ரணதுங்க பேட்டி

கொழும்பு, ஏப். 8

''இராணுவ தலைமைத்துவத்திலேயே எமது வெற்றி தங்கியுள்ளது. இராணுவம் பலமாக இருப்பினும், இராணுவத் தலைமைத்துவத்திலேயே அது அதிகமாகத் தங்கியுள்ளது''

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் பதவியில் இருந்து விலகும் ஜெனரல் சிறில் ரணதுங்கா ''சண்டே ரைம்ஸு''க்கு அளித்த பேட்டி ஒன்றில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

ஜெனரல் ரணதுங்க மேலும் கூறியதாவது:

இராணுவத்தால் விடுதலைப் புலிகளை தோற்கடிக்க முடியும் என்பது எனது நம்பிக்கை, எனினும் இது இராணுவத்தின் தலைமைத்துவத்திலேயே தங்கியுள்ளது.

இராணுவத்திற்கு நல்ல தலைமை இருப்பின் சிப்பாய்கள் அத்தலைமையின் பின்னால் நரகத்திற்குச் சென்று திரும்பவும் தயாராகவிருப்பார்கள்.

இராணுவ உயர் நிலை அதிகாரிகள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் காரணமாக யுத்தத்தில் ஈடுபட்டுள்ள படையினரின் மனோபலம் குன்றவோ, இழக்கவோ அனுமதிக்க முடியாது — என்றார்.

யுத்தத்தில் வெற்றியீட்ட முடியும் என்பதன் அர்த்தம் பற்றி அவர் விளக்கையில்—

''அரசியல் தீர்வு ஒன்றை ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்த வேண்டும் என்பதே அதன் அர்த்தமாகும்'' என்றார்.

இராணுவ அதிகாரி எவராக இருப்பினும் தன்னிச்சையாக அவர் நடக்க முயற்சிப்பின் அல்லது பாதை தவறிச் செல்வாராகில் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டாக வேண்டும் என்றும் அவர் சொன்னார். (ஓ-எ)

# தமிழ் இசை விழா இரண்டாம் நாள்

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் தமிழ் இசைவிழா இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று வியாழக்கிழமை இரவு 7மணிக்கு ஆரம்பமாகும்

நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு விநாயகர் ஆலய முன்றலில் நடைபெறும் இன்றைய நிகழ்ச்சிகளில் பாட்டு, வயலின் மற்றும் வீணை, மிருதங்கக் கச்சேரிகள் இடம் பெறும். (ஓ-111)

## குண்டு அச்சுறுத்தல்:

# கட்டுநாயக்கா முழுவதும் தீவிர பொலீஸ் கண்காணிப்பு

கொழும்பு, ஏப். 8

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையப் பிரதேசத்தைச் சுற்றிய கண்காணிப்பு நடவடிக்கைகளை பொலீஸார் தீவிரப்படுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வைக்கப்படலாம் என்ற தகவலை அடுத்து விமான நிலையத்துக்கு வரும் வாகனங்கள் மற்றும் பயணிகள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

விமான நிலையத்தின் சகல பகுதிகளும் பொலீஸாரின் தீவிர கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. (ஓ-எ)

# படையினருக்கு பரிசு வழங்க பௌத்த பிக்கு திட்டம்

கொழும்பு, ஏப். 8

வடக்கு - கிழக்குப் போரில் ஈடுபட்டு வரும் ஸ்ரீலங்காப் படையினருக்கு உற்சாக மூட்டுவதற்காக அவர்களுக்குப் பரிசில்களை வழங்கப் போவதாக பௌத்த பிக்கு ஒருவர் அறிவித்துள்ளார்.

சிங்கள மகாஜன பெரமுனையைச் சேர்ந்த வண. குணதிசதேரரே இந்த பௌத்த பிக்கு ஆவார்.

படையினருக்கு பரிசில்களை வழங்கவிரும்பும் பொது மக்கள் பரிசில்களைத் தமது அலுவலகத்தில் ஒப்படைக்கலாம் என்றும் அந்த பௌத்த பிக்கு அறிவித்துள்ளார்.

## டிசம்பர் ஜி. சி. ஈ. (சாதாரணதர) பரீட்சை

# மற்றும் சில பாடசாலைகளின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப். 8

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜீ. சீ. ஈ. சாதாரணப் பரீட்சையில் யாழ். மாவட்டப் பாடசாலைகள் பெற்ற பெறுபேறுகள் கடந்த 5ஆம் திகதி உதயனில் வெளிவந்திருந்தன. பிந்திக் கிடைத்த மற்றும் சில பாடசாலைகளின் பெறுபேறுகள் வருமாறு:

**யாழ்ப்பாணக் கல்லூரி**

7டி — ஒருவர், 6டி, சி — இருவர், 6டி, சி, எஸ் — இருவர், 5டி, 2சி — இருவர், 4டி, 3சி — ஒருவர், 4டி, 3சி, எஸ் — இருவர்.

**வட்டு. இந்து**

5டி, 2சி — மூவர், 4டி, 3சி, இருவர்.

**திருஞானசம்பந்தர்**

4டி, 4சி — இருவர், 2டி, 4சி, எஸ் — ஒருவர்.

**யாழ்ற்ரன்**

4டி, 2சி — ஒருவர், 3டி, 5சி — ஒருவர், 3டி, 3சி, 2எஸ் — ஒருவர், 2டி, 3சி — ஒருவர், 2டி, 2சி, 3எஸ் — இருவர்.

**வட்டு. திருநாவுக்கரசு**

டி, சி, 4எஸ் — ஒருவர்.

**விக்ரோறியா**

4டி, 3சி, எஸ் — ஒருவர், 4டி, 3சி — ஒருவர், 3டி 4சி, எஸ் — ஒருவர், 3டி, 4சி — இருவர், 3டி, 3சி, எஸ் — ஒருவர்.

**பண்டத்தரிப்பு இந்து**

2டி, 5சி — இருவர்.

**அராலி இந்து**

3டி, 3சி, எஸ் — ஒருவர், 2டி, 4சி, எஸ் — ஒருவர்.

**ஸ்கந்தா**

7டி — ஒருவர், 4டி —4பேர், 3டி — 4பேர்.

**புலோலி மெதடிஸ்தமிஷன்**

4டி, சி, 3எஸ் — ஒருவர், 2டி, 3சி 3எஸ் — ஒருவர்

**மானிப்பாய் இந்து**

6டி — ஒருவர், 5டி — ஒருவர்' 4டி — இருவர், 2டி — மூவர், 2டி — 12பேர்.

**இணுவில் சைவப்பிரகாசம்**

5டி, 2சி, எஸ் — ஒருவர், 3டி, 4சி, எஸ் — ஒருவர்.

**மல்லாகம் ம. வி.**

4டி, 2சி, எஸ் — ஒருவர், 4டி, 3சி — ஒருவர், 3டி, 2சி, எஸ் — ஒருவர்.

**கந்தரோடை தமிழ்க் கந்தையா**

5டி, 3சி — ஒருவர், 3டி, 4சி, — ஒருவர், 2டி, 4சி, 2எஸ் — ஒருவர்

**சாவகச்சேரி இந்து**

7டி — ஒருவர், 6டி — 5பேர், 5டி — 11பேர், 4டி—11பேர், 3டி — 14பேர்.

**சாவகச்சேரி டிறிபேக்**

6டி, சி — ஒருவர், 4டி, 3சி, எஸ்—ஒருவர், 4டி, சி 2எஸ்— ஒருவர், 3டி, 3சி, எஸ் — இருவர், 3டி, 2சி, 2எஸ்—ஒருவர், 2டி, 4சி, 2எஸ் — ஒருவர்.

**சாவகச்சேரி மகளிர்**

2டி, 4சி, எஸ் — ஒருவர், 2டி 3சி, 3எஸ் — இருவர்

குறிப்பு: அழகியல் பாடத்துக்கான பெறுபேறுகள் இன்னும் வெளிவரவில்லை அழகியல் பாடத்துக்கான பெறுபேறுகள் வெளிவரும் போது 8ஆவது பாடமாக அழகியல் பாடத்தை எடுத்தவர்களின் பெறுபேறுகள் மாற்றம் அடையலாம். (இ)

# தமிழ் மக்களை ஏமாற்றும் போலி சி. ஐ. டி. பொலிஸார்

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து கொழும்பிற்கு வரும் தமிழர்களிடமிருந்து பணம் பறிக்கும் கோஷ்டி குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி புறக்கோட்டைப் பொலீஸார் கோரியுள்ளனர்.

இக்கோஷ்டியினர் தாம் இரகசியப் பொலீஸார் என்று கூறி போலி சி. ஐ. டி. அடையாள அட்டைகளைக் காட்டி மிரட்டி பணம் பறிப்பதில் ஈடுபடும் செயல்கள் கொழும்பில் அதிகரித்து வருவதாகப் பொலீஸார் கூறுகின்றனர்.

அதனை அடுத்து இந்த எச்சரிக்கைப் பிரசுரங்களை புறக்கோட்டைப் பொலீஸார் வெளியிட்டுள்ளனர். (ஓ-எ)

# இலக்கியம் காட்டும் அறநெறிகளை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும்

## 'மகர யாழ்' விருது பெற்ற டாக்டர் பதிலுரை

யாழ்ப்பாணம், ஏப் 6

இலக்கியங்கள் மக்கள் சுவைப்பதற்காக மட்டும் எழுதப்பட்டவை அல்ல. அவை சமுதாயத்தின் வழிகாட்டிகளாகும். தமிழ் இலக்கியங்கள் யாவும் அவை தோன்றிய காலங்களின் மக்கள் வாழ்க்கை முறைகள் நெறிகளைப் பிரதிபலிப்பனவாக மட்டுமன்றி பின்வரும் காலத்தவர்களுக்குரிய வழிகாட்டிகளாகவும் மிளிர்கின்றன. அவை என்றென்றும் உயிர்ப்புடன் விளங்க வேண்டுமெனில் இலக்கியங்கள் காட்டும் அறநெறிகளையும் வாழ்க்கைத் தத்துவங்களையும் நாம் எமது அன்றாட வாழ்க்கையில் கைக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் ''மகரயாழ்'' விருது பெற்ற வைத்திய நிபுணர் சபாரத்தினம் சிவகுமாரன்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்திய கம்பன் விழாவின் முதலாம் நாள் நிகழ்ச்சிகளின் போது. மகர யாழ். விருதைப் பெற்ற பின்னர் வைத்திய நிபுணர் சிவகுமாரன் பதிலுரை நிகழ்த்தினார்.

அவரது பதிலுரை கம்பராமாயணம், மகாபாரதம், பெரியபுராணம் போன்ற இலக்கியங்களில் இருந்து மேற்கோள்கள் காட்டப்பட்ட இலக்கியவளம் செறிந்த உரையாக அமைந்தது; கல்கி தொடக்கம் சிவா ஜகந்நாதன் வரையான எழுத்தாளர்கள் பலரது கருத்துக்களையும் தமது பதிலுரையில் டாக்டர் சிவகுமாரன் நயம்பட எடுத்துச் சொன்னார்.

கருத்தாழம் மிக்க அவரது பதிலுரையில் அவர் மேலும் கூறியதாவது:

யாழ்ப்பாணம் தமிழும், சைவமும் வளர்ந்த பூமி; வளர்த்த நாடு. இங்கு மேடையில் வீற்றிருக்கும் மூத்த தமிழறிஞர்கள் இப்போதும் தமிழ் வளர்ந்து கொண்டிருப்பதற்கு சான்று பகர வல்லவர்கள்.

பெரும் புகழும், சீரும் சிறப்பும் பெற்ற யாழ்ப்பாணம் இன்று வெளிச்சம் இல்லாத வீடாக அகதிகள் அலையும் நாடாக இருக்கின்றது. இந்நிலை மாறி தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். பேதமற்ற மக்களாக எல்லோரும் அன்புடன் அறநெறி ஓங்க வாழும் காலம் மீண்டும் தோன்ற வேண்டும்.

சிறந்த சமூகத் தொண்டர்கள் பலர் இருப்பினும் என் மீது கொண்ட அன்பின் பொருட்டு ''மகர யாழ்'' விருதை எனக்கு வழங்கிக் கௌரவித்த அனைவருக்கும், மக்களுக்கும் நன்றி,

யாழ். ஆஸ்பத்திரி இப்போது இயங்குவதற்கும். மிக நெருக்கடியான வேளையில் அது மானிப்பாயில் இயங்கியதற்கும் அங்கு பணி புரியும் சகல அதிகாரிகளும், ஊழியர்களுமே காரணமாக இருந்தனர். ஆகையால் இந்த விருது, பரிசு, பதக்கம் யாவும் யாழ். ஆஸ்பத்திரிக்கே உரியன. ஆகையால் அவற்றை அன்பு செய்து நீங்கள் எனக்கு அன்பளிப்புச் செய்ததை நான் ஆஸ்பத்திரிக்கே வழங்க விரும்புகிறேன் — என்றார்.

துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தமது தலைமையுரையில் தெரிவித்ததாவது;

எமது இனம் சிங்கள இனத்திலும் பார்க்க கீழான நிலையில் இருக்கும் நிலை மாற வேண்டும்.

தமிழரின் பண்பாடு போற்றத்தக்கதாக இருந்தது என்பதை நாம் படித்திருக்கின்றோம் தற்போது எமது பண்பாடுகளைக் காண்பது அரிதாக உள்ளது. ஒவ்வொரு தமிழனும் தமது இனத்தின் உயர்வுக்குப் பாடுபட வேண்டும்.

இன்று பலர் தமது சொந்த நலனை முன்னிட்டு நாட்டை விட்டு வெளியேறிவிட்ட போதும் இந்த மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன் தான் பெறக்கூடிய வசதிகளைத் துறந்து எமது மக்களுக்குச் சேவை செய்யும் டாக்டர் சிவகுமாரன் இந்த விருது மூலம் பாராட்டப்படுவது மகிழ்ச்சிக்குரியது — என்றார். (அ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதாந்தம் 5 ஆயிரம் பரல் ம. எண்ணெய் வடக்கிற்கு!

## தொடர்ந்து எடுத்துவர அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ். மாவட்டத்துக்கு தொடர்ந்து மாதாந்தம் 5 ஆயிரம் பரல் மண்எண்ணெய் கப்பலில் எடுத்து வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நேற்று கொழும்பிலிருந்து யாழ். செயலகத்துக்கு தகவல் அனுப்பியுள்ளார்.

கடந்தமாதம் யாழ். மாவட்டத்துக்கு எடுத்துவர கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதித்த 5 ஆயிரம் பரல் மண்எண்ணெய் "நில்கிரி" கப்பல் மூலம் மூன்று தொகுதிகளாக இங்கு ஏற்றிவரப்பட்டது.

கொழும்பில் உயர்மட்ட அதிகாரிகளுடன் அரச அதிபர் பேச்சுக்கள் நடத்தியதை அடுத்து தொடர்ந்து மண்எண்ணெய் எடுத்துவர அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. [உ-3]

## சித்த மருத்துவத்துறை

# மாணவர் பிரச்சினைகளை ஆராய அதிகாரிகள் வருவர்?

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நேரில் ஆராய்வதற்காக சுதேச வைத்திய அமைச்சுச் செயலாளரும், ஆயுள்வேத ஆணையாளரும் யாழ்ப்பாணம் வர விருப்பம் தெரிவித்துள்ளனர்.

யாழ். சித்த மருத்துவத் துறை மாணவர்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகள் குறித்து இந்தத் துறை மாணவர் சங்க தூதுக்குழு அவர்களிடம் எடுத்துக் கூறிய சமயமே இந்த விருப்பத்தை அவர்கள் தெரிவித்தனராம்.

யாழ்ப்பாணம் வருவதற்கான ஏற்பாடுகளை மாணவர் சங்கம் செய்தால், தாம் யாழ்ப்பாணம் வரமுடியும் எனவும் அவர்கள் தூதுக்குழுவினரிடம் தெரிவித்தனர்.

அவர்களை யாழ்ப்பாணம் அழைத்துவருவதற்கான ஏற்பாடுகளை தாம் மேற்கொள்ளவிருப்பதாக சித்த மருத்துவத்துறை மாணவர் சங்க தலைவர் என். வர்ணகுலேந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார். (உ-3)

## மக்களுக்கு ம. எண்ணெய் விநியோகம்

மக்களது வசதிகருதி, அவர்களது குடும்ப அட்டைக்கு மூன்றாவது தடவையாகவும் ஒரு லீற்றர் மண்எண்ணெய் வழங்கப்படும்.

மூன்றாவது பங்கீட்டுக்காக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மண்எண்ணெய் ஒதுக்கப்பட்டுள்ளதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ப. நோ. கூ. சங்கங்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட மண்எண்ணெய் கோட்டாவை உடனடியாகப் பெற்று விநியோகிக்குமாறும் செயலகம் கேட்டுள்ளது. [அ-3]

## 7 மணிக்கு முன் சேவல் கூவத் தடை!

லண்டன், ஏப். 8

காலை 7 மணிக்கு முன் மிகவும் சத்தமாக சேவல் கூவ நீதிமன்றம் தடை விதித்துள்ளது!

இந்தச் சம்பவம் லண்டனில் நடந்தது.

பிலிப் ஜோன் என்பவர் சேவல் ஒன்றை வளர்த்து வந்தார். அதன் வயது 4. இச் சேவல் அதிகாலையில் கூவி பக்கத்து வீட்டுக்காரர்களைத் தொல்லைப்படுத்தியது.

அவர்கள் நீதிமன்றில் வழக்குப் போட்டார்கள்.

காலை 7 மணிக்கு முன் அடுத்த வீட்டு படுக்கை அறைக்குள் கேட்காத வகையில் இந்தச் சேவல் எழுப்பும் சத்தத்தை அனுமதிக்கலாம். ஆனால் அதைவிட உரத்த குரலில் இந்தச் சேவல் கூவுவதால் இதற்குத் தடை விதிக்கிறேன் என நீதிபதி தீர்ப்பில் கூறியிருந்தார்.

இந்த வழக்கிற்காக பிலிப் ஜோன் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவு செய்தார்.

## முகாமைத்துவ பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ். கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்தில் நடைபெற்ற முகாமைத்துவப் பயிற்சி நெறியில் இதுவரை கலந்து கொள்ளாத பகுதித் தலைவர்களுக்கு என நாளை முதல் எதிர்வரும் திங்கள் வரை விசேட பயிற்சி நெறி ஒன்று இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### திருமலை – பருத்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து புனர்வாழ்வு அமைச்சு கேட்டு அறிவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சேவையை நடத்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியை புனர்வாழ்வு அமைச்சு கோரவிருப்பதாகவும் அரச அதிகாரிகளிடம் புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

120 பயணிகள் இந்த கப்பலில் பயணம் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பயணிகள் கப்பல்சேவையை நடத்த புனர்வாழ்வு அமைச்சு முயற்சி எடுத்து வருவதாக முன்னரும் செய்திகள் வெளியாகியிருந்ததும் —

ஆனால் அப்போதைய முயற்சிகள் செய்துமுடியாமல் ... தெரிந்தவையே. (உ-3)

# தமிழகத்தில் இடம்பெறும் நூதன போராட்டங்கள்!

சென்னை, ஏப். 8

தமிழகத்தில் பங்கீட்டு அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து அங்கு அண்மையில் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன.

மத்திய அரசின் முடிவைக் கண்டித்து தமிழக அ.தி.மு.க.வின் எம். பிக்கள், எம். எல். ஏக்கள் உட்பட பல கட்சிகளைச் சேர்ந்தோர் ஆர்ப்பாட்டங்கள், ரயில் மறியல், வீதி மறியல் ஆகிய போராட்டங்களில் ஈடுபட்டனர்.

சென்னையில் அ. தி. மு. க. மாணவர் அணியினர் இவற்றையெல்லாம் விஞ்சிய வகையில் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் காவலில் நின்ற பொலீஸாரைத் தள்ளிவிட்டு, அத்துமீறி நுழைந்து விமானத்தின் முன்னால் மறியற் போராட்டம் நடத்தினர்.

இதனையும் தோற்கடிக்கும் வகையில் அ. தி. மு. கவைச் சேர்ந்த தூத்துக்குடி எம். எல். ஏயான ரமேஷ் கடலில் மறியற் போராட்டத்தை நடத்தினார்.

தூத்துக்குடி கடற்கரையில் இருந்து காலையில் 27 பேருடன் ஒரு படகில் எம். எல். ஏ. புறப்பட்டார். சற்றுத் தொலைவில் நின்று கொண்டிருந்த ஒரு கப்பலின் முன்னால் சென்ற அவரது குழுவினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தகவல் அறிந்ததும் தூத்துக்குடி தெர்மல்நகர் பொலீஸார் விரைந்து சென்று எம். எல். ஏயையும் அவரது அணியினரையும் கைது செய்தனர். அவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டனர். (உ)

## செயலகத்துக்கு ரூபா 7 கோடி கட்டுநிதி

யாழ்ப்பாணம், ஏப். 8

ஏப்ரல் மாத செலவீனங்களுக்காக ஏழு கோடி பத்து லட்சம் ரூபா கட்டுநிதி யாழ் செயலகத்துக்கு கிடைத்துள்ளது.

இம் மாதத்துக்குரிய ஓய்வூதியம், சம்பளம் போன்ற கொடுப்பனவுகளுக்காகவே இந்த கட்டுநிதி அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## ஆலங்கேணியில் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஏப். 8

கடந்த திங்களன்று பிற்பகல் 3.30 மணியளவில் ஆலங்கேணி துறையை அண்டிய பகுதியில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

இதனால் கிளாலிக் கரைக்கு எடுத்து வரப்படுவதற்காக அங்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த பல பொதிகள் நாசமாகின, அப்பகுதியிலிருந்த சில கடைகள். கொட்டகைகள் என்பனவும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

விமானத்தைக் கண்டதும் அப்பகுதியில் நின்ற மக்கள் சிதறி ஓடிவிட்டதால் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை. (உ-17-162)

### மகாப்பொல..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை விடுத்தனர்.

இரு பல்கலைக்கழகங்களின் சகல பீட மாணவர்களுக்கும் இந்த அதிகரிப்பை வழங்க அப்போது அமைச்சர் இணக்கம் தெரிவித்ததாக கொழும்பு சென்று திரும்பிய மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மேலதிகமாக வழங்கப்படும் ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கு பெறுமதியான மண்எண்ணெய், காகிதாதிகள் போன்றவற்றை மாணவர்கள் பெறுவதற்கு வசதியாக, அப்பொருள்களைக் கப்பலில் எடுத்துவர அனுமதிப்பதற்கும் அமைச்சர் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்தார்.

மாணவரின் எண்ணிக்கை மற்றும் தேவையின் விவரங்களை உபவேந்தர் மூலம் அனுப்புமாறு அமைச்சர் கோரியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### லலித்...

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

டுமே பார்த்தான் என்றும் கூறப்படுகிறது.

ஊன்றுகோலின் உதவியுடன் நடக்கும் சுனில் குலதுங்கா, கடத்தல் காரர்களை எதிர்த்துப் போராடமுடியாது இருந்தார் என்றும் சொல்லப்படுகிறது.

உள்ளூர் பொலிஸாரிடம் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இது தொடர்பாக புகார் செய்துள்ளது. (உ-எ)

### காவல்துறையின்...

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி. துணைப் பொறுப்பாளர் திரு. ஜவான் மற்றும் திரு. பதுமன், திரு. செந்தாளன், ஈழநாதம் பொறுப்பாளர் திரு. இனேஷ், திரு. ரேகா ஆகியோர் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

அணிவகுப்பு மரியாதையை ஏற்கும் நிகழ்ச்சியைத் தொடர்ந்து காவல்துறை பாண்ட் வாத்தியக் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் அங்கு இடம்பெற்றது. (உ-5)

## வின்சென்ட் இடத்துக்கு புதிய அமைச்சர்

கொழும்பு, ஏப். 8

புதிய நாடாளுமன்ற விவகார மற்றும் சுற்றுப் புறச்சூழல் அமைச்சராக டாக்டர் விமல் விக்கிரமசிங்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சர் வின்சென்ட் பெரேராவின் மரணத்தால் ஏற்பட்ட காலி இடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசாங்க நாடாளுமன்றக் குழுவின் பிரதம கொரடாவாகவும் டாக்டர் விமல் விக்கிரமசிங்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இது வரை சுற்றுப் புறச் சுழல் மற்றும் திட்டமிடல் ராஜாங்க அமைச்சராகக் கடமையாற்றி வந்தார். (உ-எ)

### நிதி வழங்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களிடம் — தொண்டர் நிறுவனங்களிடம்— நிதி உதவி வழங்குமாறு இணையம் மூலம் கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட அத்தியாவசியமான மருந்து வகைகளை வாங்குவதற்கு மொத்தம் 15 லட்சம் ரூபா தேவைப்படுகிறது.

நோர்வே தூதரகம் மூன்றரை லட்சம் ரூபாவையும், ஐக்கிய இராட்சியத்தின் குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் இரண்டு லட்சம் ரூபாவையும் அகதிகள் புனர்வாழ்வு நிதியம் ஒரு லட்சம் ரூபாவையும் வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன. அரசாங்கமும் தனது தரப்பில் ஐந்து லட்சம் ரூபா வைத் தரஇணங்கியுள்ளதாம். யாழ். மறை மாவட்ட மனித முன்னேற்ற நிலையம் [கியூடெக்] 50 ஆயிரம் ரூபாவை வழங்கி உள்ளது.

தேவையான பணத்தில் மிகுதி மூன்று லட்சம் ரூபாவையும் எவ்வாறு திரட்டலாம் என்பது குறித்து அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் ஆஸ்பத்திரி நிர்வாகத்தினருடன் கலந்தாலோசிக்க உள்ளது:

கொடிதினம் ஒன்றை நடத்தும் சாத்தியக் கூறுகள் குறித்தும் ஆலோசிக்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. (அ-162-51)


## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் யோகலிங்கம்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் யோகலிங்கம் (கணக்காளர்) கடந்த சனியன்று சவுதி அரேபியாவில் காலமானார்.

இவர் திருமதி பத்மலீலாவின் (முன்னாள் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் — பத்தமேனி) அன்புக் கணவரும், சு. புலேந்திரலிங்கத்தின் (கிளை முகாமையாளர் ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி) அன்புச் சகோதரரும். தயாநம்பி (U. K), திருமதி வாசுகி குகதாஸ் (U. K), அருள்நம்பி (பொறியியலாளர். மெரிகோல்ட் நிறுவனம் கொழும்பு.) வேல்நம்பி (பொறியியலாளர், பெங்களூர்) ஆகியோரின் அருமைத் தந்தையாரும்—

பொ. குகதாஸ் (பொறியியலாளர் U. K, முன்னாள் பொறியியலாளர் கட்டடத் திணைக்களம், கொழும்பு), தயாநம்பி சியாமளா ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற மூ. வீரசிங்கம் மற்றும் திருமதி ரத்தினம் வீரசிங்கம், ஆகியோரின் மருகனும் ஆவார்.

ஈமைக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி பத்மலீலா
(மனைவி)

301, ஜம்பட்டா வீதி,
கொட்டாஞ்சேனை.
(25154)

### திருமதி பூரணம் நானாபரணம் கியூபேட்

அச்சுவேலியைச் சேர்ந்த திருமதி பூரணம் நானாபரணம் கியூபேட் 3-4-93 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தவனம் கியூபேட் அவர்களின் அன்பு மனைவியும், யேசுதாசன், திருமதி டெய்சி (பிலோமினா) திருச்செல்வம், பிரான்சிஸ் சேவியர் (ஆசிரியர், புனித சாள்ஸ் ம வி ), திருமதி றொசபெல்லா றொகேசன் (சுவிஸ்), திருமதி புஸ்பராணி பத்மநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருச்செல்வம் (போர்ட் கார் கோ, கோர்ப்பரேசன் கொழும்பு), திருமதி சின்னமலர் மணி) யேசுதாசன், திருமதி காமலா சேவியர், றொகேசன் (சுவிஸ்) பத்மநாதன் (சுவிஸ்), ஆகியோரின் அன்பு மாமியாரும் றோகான் ஜோர்ஜ். டெய்சி றொசபெல்லா (ஆசிரியை வைத்தீஸ்வரா கல்லூரி , றஜீவன் (சிலோன் தியேட்டர், கொழும்பு), சஜீவன், நிரோஜன், நிலக்ஷி, றதீசன், அமிததிஷ்யா, அனோஷன், ஜீவிதா, லொபிட், பபா, றொகான், றுக்ஷி, ஜெகான், றமணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 6-4-93 இல் கொழும்பில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
திருமதி. காமலா சேவியர்
(மருமகள்)

இல. 875,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
[25148]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 222 இல் ... கத்திலுள்ள அச்சகத்தில் 08 - 04 - 1993 இல் ... வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org